ස්ථාවර නියෝග අංක 119 (4) ප්‍රකාර රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් නිරීක්ෂණ සහ ගනු ලැබූ ක්‍රියාමාර්ග ඉදිරිපත් කිරීම.

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) பிரகாரம் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்த அறிக்கை தொடர்பிலான அவதானிப்புகளையும் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் சமர்ப்பித்தல்.

Submission of observations and steps taken with regard to the reports presented to the Parliament by the Committee on Public Accounts in terms of theStanding Order No. 119(4)

පාර්ලිමේන්තුවේ සභානායක කාර්යාලය
பாராளுமன்ற சபைமுதல்வரின் அலுவலகம்
Office of the Leader of the House of Parliament

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் பிரகாரம் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான அவதானிப்புகளும் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகளும் பற்றிய அறிக்கையிடல்

பாராளுமன்றத் தொடர் இலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர் : பாராளுமன்றத்தின் சபை முதல்வர் அலுவலகம்

2022 நிதியாண்டிற்குரிய இணையவழி தகவல் முகாமைத்துவ முறைமையினால் அரச நிறுவனங்களை கணிப்பீடு செய்யும் போது குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகள்/தற்போதைய நிலை
<u>1 ஆம் பகுதி</u>	
• உள்ளகக் கணக்காய்வு ஐயவினா ஆவணம் கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை. உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் உரியவாறு நடத்தப்படவில்லை.	இது வரையில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிராமை காரணமாக உள்ளகக் கணக்காய்வு விசாரணை அல்லது இடர் ஆவணம் ஒன்றினை இற்றைப்படுத்த முடியாது போனது. எனவே உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவில்லை என்பதுடன், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களையும் உரிய முறையில் நடாத்த முடியாமல் போனது. எவ்வாறாயினும் நடைமுறையில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமையால் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடானது இற்றைப்படுத்தி பேணிவரப்படுகின்றது.
<u>2 ஆம் பகுதி</u>	
• இனங்காணப்பட்ட மூன்றாவது செயலாற்றுகை குறிகாட்டியின் அடைவு **50%** இற்கும் குறைந்த மட்டத்தில் இருத்தல்.	சபை முதல்வர் அலுவலகத்தின் 2022 ஆம் ஆண்டிற்குத் தயாரிக்கப்பட்ட தொழிற்பாட்டுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கு செய்யப்பட்ட செயலாற்றுகை அறிக்கையின் விசேட குறிகாட்டிகளின் கீழ் 02 விசேட குறிகாட்டிகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தன. அதன்படி இரண்டு செயலாற்றுகைக் குறிகாட்டிகளில் மாத்திரம் தகவல்களை உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும், தவறுதலாக மூன்றாவது செயலாற்றுகை குறிகாட்டி தொடர்பாகவும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. எதிர்வரும் காலங்களில் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஹர்ஷ விஜேவர்தன

பாராளுமன்றத்தின் சபைமுதல்வரின் செயலாளர்